# சமுதாயத்தில் நகர்மயமாதலின் தாக்கம், பிரச்சனைகள் மற்றும் தீர்வுகள்

**நகர்மயமாதல்**

நகர்மயமாதல் என்பது மக்கள் ஊரகப்பகுதிகளில் இருந்து நகர்ப்பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து நகரங்களை வளர்ச்சியடையச்செய்தல் ஆகும்.

**நகரியம்**

நகரியம் என்பது நகர்ப்புற வாழ்க்கையாகும். இங்கு தொழில் நிமித்தமான உறவுகள் மற்றும் தங்களது தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள சார்ந்திருத்தல், சமூக உறவுகளுக்கு முக்கியத்துவம் இன்மை, தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக கட்டமைப்புகளில் முன்னேற்றம் ஆகியன அமையும்.

**நகரியத்தின் தன்மைகள்**

லூயின் வொர்த் நகரியத்தின் தன்மைகளாக கூறுவன:

1. நிலையற்ற தன்மை
2. மேம்போக்கு தன்மை
3. மற்றவர்களுடன் தொடர்பற்று இருத்தல்
4. தனித்தன்மை

சொரோகிங் மற்றும் சிம்மர்மேன் நகர்மயத்தின் தன்மைகளாக கூறுவன:

1. வேளாண்மை அற்ற தொழில்கள்
2. மக்கள்தொகையின் அளவு
3. மக்கள்தொகையின் அடர்த்தி
4. சுற்றுச்சூழல்
5. சமூக வேறுபாடு
6. சமூக இடம்பெயர்வு
7. சமூக தொடர்பு
8. சமூக ஒற்றுமை

**நகர்மயமாதலுக்கான காரணங்கள்**

1. தொழில்மயமாதல்
2. வணிகமயமாதல்
3. சமூக பயன்கள் மற்றும் சேவைகள்
4. வேலைவாய்ப்பு
5. நவீனமயமாதலால் ஏற்படக்கூடிய வாழ்க்கை மாற்றங்கள்
6. ஊரக நகர்ப்புற மாற்றம்

**நகர்மயமாதலினால் ஏற்படும் சமூக பாதிப்புகள்**

1. நகர்மயமாதல் மற்றும் குடும்பம்
2. நகர்மயமாதல் மற்றும் சாதி
3. நகர்மயமாதல் மற்றும் பெண்களின் நிலை
4. நகர்மயமாதல் மற்றும் கிராம வாழ்க்கை

**நகர்ப்புற பிரச்சனைகளுக்கான காரணங்கள்**

1. இடம்பெயர்வு
2. தொழில் வளர்ச்சி
3. அரசாங்கத்தின் மெத்தன போக்கு
4. நகர திட்ட அமைப்பில் குறைபாடு
5. சுயநல போக்கு

**நகர்மயமாதலினால் ஏற்படும் பிரச்சனைகள்**

1. வீடுகள் மற்றும் சேரிகள்
2. மக்கள்பெருக்கம்
3. குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் திட்டம்
4. போக்குவரத்து நெரிசல்
5. சுகாதாரம்
6. மின் பற்றாக்குறை
7. மாசு
8. நலக்குறைபாடு மற்றும் நோய் பரவல்
9. நகர்ப்புற குற்றங்கள்

**நகர்ப்புற பிரச்சனைகளுக்கான தீர்வுகள்**

1. திட்டமிட்ட நகர்ப்புற வளர்ச்சி
2. வட்டார திட்டம் மற்றும் நகர்ப்புற திட்டம்
3. ஊரக பகுதிகளுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல்
4. ஊரக பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைத்தல்
5. நகராட்சிகளுக்கென நிதி ஆதாரங்களை பெருக்குதல்
6. தனியார் போக்குவரத்தினை ஊக்குவித்தல்
7. வாடகை கட்டுப்பாட்டு சட்டத்தில் திருத்தம் செய்தல்
8. வீட்டுவசதி திட்டத்தினை மேம்படுத்தல்
9. அதிகார பரவலாக்கல்
10. மக்கள்தொகையை கட்டுப்படுத்துதல்
11. அடிப்படை வசதிகளை பெருக்குதல்
12. நிலைத்த நீடித்த மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த நகரங்களை உருவாக்குதல்

**அரசின் திட்டங்கள்**

## ❖ Housing for All (URBAN):

- **நோக்கம் :** அடுத்த ஏழு வருடங்களுக்குள் (2022-க்குள்) நகர எல்லையில் வசிக்கும் ஏழைகளுக்கு கட்டுப்படியாகும் விலையிலான இரண்டு கோடி வீடுகள் கட்டித் தருவது.

## ❖ HRIDAY Scheme (National Heritage City Development and Augmentation Yojana):

- **நோக்கம்** : பன்னிரெண்டு நகரங்களின் பாரம்பரியத் தன்மையைப் போற்றிப் பாதுகாத்தல்,
- நகரங்கள்: அம்ரித்சர், வாரணாசி, கயா, புரி, அஜ்மீர், மதுரா, துவாரகா, பதாமி, வேளாங்கண்ணி, காஞ்சீபுரம், வாரங்கல் (தெலுங்கானா), அமராவதி (ஆந்திரப்பிரதேசம்).

## ❖ Smart Cities Mission :

- **நோக்கம்** : தொழில் நுட்பம், மின்திறன், திறன்மிகுந்த போக்கு வரத்து வசதி, வேலைக்கு நடந்து செல்லல், சைக்கிள் பயணம் போன்ற அனைத்து வசதிகளையும் தரும் 100 ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குதல்.

## ❖ Swachch Bharat Abhiyan :

- **நோக்கம்** : நாட்டிலுள்ள 4041 நகரங்களின் (Statutory towns) தெருக்கள், சாலைகள் ஆகியவற்றை சுத்தப்படுத்தும் ஒரு 'தேசிய தூய்மைத் திட்டம்' காந்திஜியின் 150 ஆம் பிறந்த தினமான 2019 அக்டோபர் 2 ஆம் தேதிக்குள் இந்தத் திட்டத்தை முழு அளவில் நிறைவேற்ற திட்ட மிடப்பட்டுள்ளது.

## ❖ Atal Mission for Rejuvenation and Urban-Transportation (AMRUT): 2015

**நோக்கம்** : ஐந்து வருடங்களில் 500 நகரங்களை மேம்படுத்துதல். திட்டக்காலம் 2016 – 2021

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற திட்டம் (JNNRUM)

2015ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டம் நகர்மயமாதலில் முதன்மையான திட்டமாகும்.

இத்திட்டத்தின் முக்கியமான இரண்டு அம்சங்கள்:

1. நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை சேவைகளை வழங்குதல் (BSUP)
2. ஒருங்கிணைந்த வீட்டுவசதி மற்றும் குடிசை மேம்பாட்டு திட்டம் (IHSDP)

### மற்ற திட்டங்கள்

1. தேசிய நகர்ப்புற சுகாதார கொள்கை 2008
2. தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டம் 2013
3. தேசிய நகர்ப்புற போக்கு கொள்கை 2006

### தமிழகமும் நகர்மயமாதலும்

2011ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் நகர்ப்புற மக்கள் தொகை 34.92 மில்லியன்.

தமிழகத்தின் நகரிய மாவட்டங்கள்: சென்னை, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், திருப்பூர் மற்றும் மதுரை

தமிழகம் நாட்டில் 9.3 சதவீத நகர்ப்புற மக்கள்தொகை கொண்டுள்ளது.

தமிழகத்தின் மக்கள் அடர்த்தி நாட்டில் 3521 பேர் ஒரு சதுர கி.மீக் வாழ்கின்றனர்.

இந்தியாவில் நகர்ப்புற பணியாளர்கள் சதவீத்தில் தமிழகத்தின் பங்கு 10.5%

**நகர வளர்ச்சி தொலைநோக்கு திட்டம் 2023**

- ✓ பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு வீட்டு வசதி
- ✓ 24 x 7 குடிநீர் விநியோகம் மற்றும் சுகாதார சேவைகள்
- ✓ திறந்தவெளி கழிப்பிடமில்லா தமிழகம்
- ✓ திடக்கழிவு மேலாண்மை
- ✓ 15 லட்சம் சேரிவாழ் மக்களின் நலமேம்பாடு
- ✓ நகர்ப்புற போக்குவரத்தை நெறிப்படுத்துதல்
- ✓ உலகின் 10 சிறந்த நகரங்களை தமிழகத்தில் உருவாக்குதல்

APOLLO STUDY CENTRE 25 Years of EXCELLENCE IN COACHING

# பெண்களின் பங்கு மற்றும் பெண்கள் இயக்கங்கள்

**சிறப்பான சமூக அளவுகோல்**

ஒரு சிறப்பான சமூகத்தின் உண்மையான நிலையை அறிய வேண்டுமாயின் அதற்கு ஒரே அளவுகோல்தான் உண்டு. அது தான் பெண்களுக்கு அளிக்கப்படும் அங்கீகாரமாகும். பெண்களின் அந்தஸ்து தான் சமூக வளர்ச்சியின் அடையாளம் ஆகும். ஒரு நாட்டின் பண்பாட்டைப் பெண்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள் என்பதைக்கொண்டு தெரிந்து கொள்ளலாம். சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி பெண்கள். அதனால்தான் சமூகவியலாளர்கள் சமூகத்தின் கிட்டத்தட்ட சரிபாதி பெண்களின் நிலை பற்றி ஆய்வு செய்துள்ளனர். இந்திய சமூகத்தில் பெண்களின் நிலை என்ன?

**இந்தியா விதிவிலக்கல்ல**

உலகின் மனித சமூகத்தை ஆய்வு செய்த சமூகவியலாளர்கள் எந்த சமூகத்திலும் பெண்கள் ஆண்களுக்கு சமமாக நடத்தப்படுவதில்லை என்ற முடிவுக்கு வருகின்றனர்! அனைத்து சமூகங்களிலும் பெண்கள் வேறுபடுத்தப்படுகிறார்கள், சுரண்டப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள். சில சமூகங்களில் பெண்களுக்கு உயர்வான இடம் கொடுக்கப்படுகிறது. இருப்பினும் நடைமுறையில் அவர்களுக்கு சம உரிமைகள் அளிக்கப்படுவது இல்லை. கால மாற்றத்துக்கேற்ப பெண்களின் நிலையிலும் மாற்றம் ஏற்படத்தான் செய்கின்றது. இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

**பெண்கள் இயக்கத்திற்கான பின்புலம்**

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின்கீழ் பல அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் செய்யப்பட்டன. குறிப்பான கல்வி, வேலைவாய்ப்பு சமூக உரிமைகள் போன்றவற்றில் பெண்கள் சமத்துவத்துக்குத் தடையாக இருந்தவற்றை நீக்குவதற்கான முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எடுத்துக்காட்டாக குழந்தைத் திருமணம், உடன்கட்டை ஏறல், தேவதாசி முறை, விதவை மறுமண மறுப்பு, பர்தா முறை போன்றவற்றுக்கு எதிராக சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்திய வரலாற்றில் முதன்முறையாக இந்திய அளவில் பெண்களுக்கு எதிரான தடைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன! இத்தகைய சீர்திருத்தங்களுக்கு இந்திய சமூக சீர்திருத்தவாதிகளும் ஆதரவளித்தனர்.

ஆங்கில அரசாங்கமும் இந்திய சீர்திருத்தவாதிகளும் மேற்கொண்ட முயற்சிகளுக்கு சாதகமாக இருந்த காரணிகள் வருமாறு:

**1. மனப்பான்மை மாற்றம்**

வர்த்தகத்துக்காக வந்த ஆங்கிலேயர் மேற்கத்திற வாழ்வியல் வழிமுறைகளையும் பின்பற்றினர். எடுத்துக்காட்டாக பிரச்சினைகளை அறிவியல் பூர்வமாக அணுகுவது, நன்மை தீமைகளை பாரபட்சமின்றி விவாதிப்பது, கேள்வி கேட்டு சீராய்வது, சமூக சமத்துவம், தனிநபர் திறமை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம கல்வி, சம வேலை வாய்ப்பு, சம உரிமைகள், அனைத்து சமூகப் பிரிவினருக்கும் சம அங்கீகாரம் போன்றவை இந்திய முற்போக்கு சமூக சிந்தனையாளர்களிடையே பெரி தாக்கத்தை ஏற்படுத்தின.

**2. சீர்திருத்த இயக்கங்களின் பங்கு**

19ஆம் நூற்றாண்டை இடைப்பகுதியில் ஆங்கிலக் கல்வியால் பயனடைந்த இந்திய சமய சமூக சீர்திருத்தவாதிகள் பெண்கள் விடுதலைக்காக பெரும்பாடு பட்டனர். ராஜாராம் மோகன்

ராய், ஈஸ்வர் சந்திர வித்யாசாகர், மகரிஷி கார்வே, மகரிஷி தயானந்த சரஸ்வதி, மகாராஜா சாயாஜி ராவ் தேக்வார், சுவாமி விவேகானந்தர், தாதாபாய் நௌரோஜி, கோபாலகிருஷ்ண கோகலே, மகாத்மா காந்தி போன்றோரின் பங்கும் பங்களிப்பும் பெருமைக்குரியவை.

இவர்களைப் போன்றே பிரபல பெண் சீர்திருத்தவாதிகளான நிவேதிதா, அன்னிபெசண்ட், மார்கரெட் கசின்ஸ், சரோஜினி நாயுடு, பண்டிட் ரமா பாய், ரமா பாய் ரானடே, தோநதத் போன்றோரும் இந்தியப் பெண்களை அரசியல், சமூக, கலாச்சார, சமஉரிமைப் போராட்டங்களில் பெருமளவில் பங்கேற்கச் செய்தனர். இவர்கள் தான் இந்தியப் பெண்கள் இயக்கத்துக்கான முன்னோடிகளாவர்.

**3. பெண்கல்வி**

இந்தியாவில் பெண்ணைக் கல்விக் கடவுளாக்கி விட்டு பெண்களுக்கு 2000 ஆண்டுகளுக்கு மேல் கல்வி மறுக்கப்பட்டது! கல்வி பெற்ற பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. இவர்கள் விதி விலக்கு. பெண்களில் மிகப் பெரும்பான்மையோர் கல்வி பெறாதவர்களாகவே இருந்தனர். இவர்களுக்கு கல்வி கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்ததாகவே தெரியவில்லை.

இந்தியப் பெண்கல்வி வளர்ச்சியில் ஆங்கில அரசாங்கத்தின் பணி குறிப்பிடத்தக்கது. 1824ஆம் ஆண்டில் பம்பாயில் முதன் முறையாக பெண்களுக்காகப் பிரத்யேகமாக பள்ளி திறக்கப்பட்டது!. இப்பள்ளியில் நூற்றுக்கணக்கான பெண்கள் கல்வி பெற்றனர். பெண்களுக்குக் கல்வி கொடுத்தால் அவர்களது குடும்பங்கள் முன்னேற்றமடையும் என்று கூறினார் டல்ஹௌசி பிரபு. ஹண்டர் கல்வி ஆணையம் (1882) பெண்கல்வியின் இன்றியமையாமையை அடிக்கோடிட்டுக்காட்டியது. 1882இல் பெண்கள் உயர் கல்வி பெற்றனர். அதன் பின் பெண் கல்வி விரைந்து விரிவடைந்தது. 1901ல் 0.6% ஆக இருந்த பெண் கல்வி விகிதம் 2001இல் 64% ஆக உயர்ந்தது.

**4. பெண் தலைவிகளின் பங்கு**

இந்திய பெண்கள் இயக்க வளர்ச்சிக்குப் பெண் தலைவிகளின் பங்கு பாராட்டுக்குரியது. எடுத்துக்காட்டாக கர்நாடகத்தில் பண்டிட் ரமாபாய், மகாராஷ்டிரத்தில் ரமாபாய் ரானடே, வங்காள எழுத்தாளர் தோநதத், முதல் பெண் அரசியல்வாதி கமலாபாய் சட்டோபாத்யாயா, தாகூர் குடும்பத்தைச் சேர்ந்த சுவர்ண குமாரி தேவி, ராஜகுமாரி அம்ரித் கௌர், அன்னிபெசண்ட் அம்மையார் போன்றோர்.

**5. பெண் அமைப்புகளின் பங்கு**

பெண் தலைவிகள் மட்டுமின்றி பெண் அமைப்புகளும் இந்திய பெண் இயக்கத்துக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தன. எடுத்துக்காட்டாக ஆர்ய மகிளா சமாஜ் மற்றும் சாரதா சதன் (1887), பாரத் மகிளா பரிஷத் (1904), பாரத் ஸ்ரீமகா மண்டல் (1910), இந்திய பெண்கள் சங்கம் (1917), அகில இந்திய பெண்கள் மாநாடு (1947) கஸ்தூரிபா காந்தி தேசிய நினைவு அறக்கட்டளை ஆகியவை.

**6. பெண் பணியாளர்களின் பங்கு**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆயிரக்கணக்கான பெண்கள் வேலைக்குச் சென்றனர். அதற்குக்காரணம் ஹண்டர் கல்வி ஆணையம் (1882) செய்த மூன்று வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பரிந்துரைகளாகும்

1. பள்ளிகளில் ஆசிரியைகள் நியமிக்கப்பட வேண்டும்
2. பெண்கள் பள்ளிகளின் ஆய்வாளர்களாகப் பெண்களே நியமிக்கப்பட வேண்டும்
3. விதவைகள் ஆசிரியைகளாகச் சேர்ந்தால் அவர்களுக்குச் சிறப்பு உதவித்தொகை வழங்க வேண்டும்.

மூன்று புரட்சிகரமான பரிந்துரைகள். இப்பரிந்துரைகளின் அடிப்படையில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கான பள்ளிகள், கல்லூரிகள், ஆசிரியர் மற்றும் செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் துவக்கப்பட்டன. இவற்றால் பெண்கள் பயன் அடைந்தனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆசிரிய மற்றும் மருத்துவ வாழ்க்கைத் தொழில்கள் செல்வாக்கு பெற்றன. இவற்றோடு பெண்கள் எழுத்தர்களாகவும், கணக்கர்களாகவும், வரவேற்பாளர்களாகவும், தட்டச்சர்களாகவும் பணியாற்றினர். பெண்கள் இயக்கத்துக்கான அடிப்படை அமைக்கப்பட்டது.

**7. விடுதலைப்போராட்டத்தில் பெண்களின் பங்கு**

ஜான்சி ராணி லட்சுமி பாயும், கிட்டூர் ராணி சென்னம்மாவும் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளாவர். காந்தியின் தலைமையில் நடைபெற்ற விடுதலை போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான படித்த, பாமரப் பெண்கள் பங்கேற்றனர். அன்னிபெசண்டின் இந்தியப் பெண்கள் சங்கம் பெண்களிடையே விடுதலைப்போராட்ட உணர்வை உருவாக்கியது.

**8. சமூக சட்டங்களின் பங்கு**

ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் இருவகையான சமூக சட்டங்கள் இயற்றப்பட்டன.

1. சதி தடுப்புச்சட்டம் (1829), விதவை மறுமணச்சட்டம் (1856), சிறப்புத் திருமணச் சட்டம் (1872), குழந்தை மணம் கட்டுப்படுத்தும் சட்டம் (1929) ஆகிய திருமணம் பற்றிய சட்டங்கள்

2. திருமணமான பெண்கள் சொத்துச்சட்டம் (1874) மற்றும் இந்துபெண்கள் சொத்துரிமைச் சட்டம் (1939) ஆகிய சொத்து சார்ந்த சட்டங்கள். இச்சட்டங்களில் குறைபாடுகள் பல இருந்தன. இருப்பினும் இச்சட்டங்கள் சட்டக் குறைபாடுகளைக் கடந்து பெண் திருமணத்துக்கு எதிராக இருந்த பல தடைகளை நீக்கியது. பெண்களின் சொத்துரிமை இன்றியமையாதது என்பதை அடிக்கோடிட்டுக் காட்டின. பொதுவாக இச்சட்டங்கள் பெண்களின் சமூக அங்கீகாரமும், அந்தஸ்தும் கிடைப்பதற்கான வழி வகுத்தன.

**சுதந்திர இந்தியாவில் பெண்கள் இயக்கம்**

இந்திய விடுதலைப்போராட்ட காலத்தின்போது உருப்பெற்ற பெண்கள் இயக்கம் நாடு சுதந்திரமடைந்தவுடன் வீரியத்துடன் விரிவடைந்தது. 1970களில் இந்திய நகரங்களில் பெண்கள் தங்களது விடுதலைக்காகவும், உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தனர். கோரிக்கைப் போராட்டங்கள் நடத்தினர். பெண்களை பாதிக்கும் சமூக பொருளாதார கலாச்சார பிரச்சனைகள் பற்றிய பெண்ணிய இலக்கியம் செல்வாக்கு பெற்றது.

**1. மணக்கொடைக்கு எதிரான இயக்கம்**

மணக்கொடையிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்காக தோற்றுவிக்கப்பட்ட இயக்கம். 1980களில் இவ்வியக்கங்கள் 'தஹேஜ் விரோதி சேட்னா மன்ச்' என அழைக்கப்பட்டது. இவ்வியக்கங்களின் போராட்டத்தின் விளைவாக 1961ஆம் ஆண்டு வரதட்சணை தடுப்பு சட்டத்தில் 1984ஆம் திருத்தம் செய்யப்பட்டது.

**2. சதிக்கு எதிரான இயக்கங்கள்**

1829ஆம் ஆண்டு சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் பழக்கம் ஆங்கிலேயரால் தடை செய்யப்பட்டது.

**3. பாலியல் வன்முறைக்கு எதிரான இயக்கங்கள்**

இருபதாம் நூற்றாண்டின் இறுதிகட்டத்தில் பாலியல் வன்முறைக்கு எதிரான இயக்கங்கள் தோன்றின. இவ்வியக்கங்கள் பாலியல் வன்முறைக்கு எதிரான வழக்குகளை உச்சநீதிமன்றம் மறு ஆய்வு செய்ய வேண்டும் வலிவுறுத்தின. இவ்வியக்கங்களின் போராட்டத்தின் விளைவாக சட்ட ஆணையத்தின் மூலம் 1983ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

**4. சகாதா இயக்கம் (Shahada Movement)**

இந்தியாவில் பல்லாண்டு காலமாக அடக்குமுறைக்கும், ஒடுக்குமுறைக்கும் உள்ளானோர் இம்மண்ணின் மைந்தர்களான ஆதிவாசிகள் என்று அழைக்கப்படும் பூர்வீக குடியினர்தாம். சகாதா என்பது மகாராஷ்டிரத்தில் உள்ள பில் (Bhil) பூர்வீக குடியிருப்பாகும். இவர்கள் வறட்சியாலும், பஞ்சத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டபோது சர்வோதயக் தொண்டர்கள் அங்கு சென்று சிரமிக் சங்கதன் என்ற அமைப்பை ஏற்படுத்தி, முகாம்கள் நடத்தி ஆதிவாசிகளிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலத்தை மீட்பதற்காகவும், குறைந்தபட்ச கூலிக்காகவும், பஞ்சத்தால் பாதிக்கப்பட்டோர் மறுவாழ்வுக்காகவும் போராடினர். நிலச்சொந்தக்காரர்களுக்கு எதிராகத் துவக்கப்பட்ட இப்போராட்டம் பெண்களைக் கொடுமைப்படுத்துவோருக்கு எதிராகவும், மதுவிலக்கு ஆதரவான இயக்கமாக விரிவடைந்தது. சுருங்கக்கூறின் சகாதா இயக்கம் ஆணாதிக்கத்துக்கு எதிரான இயக்கமாகும்.

**5. சுயதொழில் பெண்கள் சங்கம் (Self-Employed Women Association-SEWA)**

பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்த பெண்களின் உரிமைகளுக்காகப் போராட தொழிற்சங்கங்கள் இருந்தன. ஆனால் முறைசாராத் துறையில் (Un-irganised Sectors) வேலை செய்தோரின் உரிமைகளுக்காகப் போராட அத்தகைய தொழிற்சங்கங்கள் எதுவும் இல்லாமலே இருந்தது. குரலற்ற முறைசாராத் தொழிலாளர்களின் குரலாக ஒலித்தார் எல்லா பட் (Ella Bhatt).

எல்லா பட் அகமதாபாத்தின் பிரபல காந்திய சோஷலிட்டு தலைவராக இருந்தவர். அவர் நெசவுத் தொழிலாளர் சங்கத்தை நடத்தி வந்தார். அவர் 1972ஆம் ஆண்டில் சுயதொழில் பெண்கள் சங்கத்தை (SEWA)த் தோற்றுவித்தார். இச்சங்கத்தின் மூலம் பல்வேறு முறைசாராத் தொழில்களில் இருந்தோரை ஒன்று திரட்டினார். குறைந்த கூலி, கேவலமான வேலைச்சூழல், இடைத்தரகர்கள், அதிகாரிகள், காவல் துறையினரின் தொல்லைகள் ஆகியவற்றிலிருந்து இப்பெண்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டது சுயதொழில் பெண்கள் சங்கம்.

சுயதொழில் பெண்கள் சங்கத்தின் பிரதான நோக்கம் முறைசாரா வேலைகளைச் செய்து வந்தோருக்கு பொருளாதார உதவி செய்தல்; சுய தொழில் செய்வோருக்குத் தொழில் பயிற்சி அளித்தல், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பதற்கு ஏற்பாடு செய்தல், அதன் மூலம் அவர்களது பொருளாதார நிலையை மேம்படுத்தல். சுருங்கக் கூறின் முறை சாரா தொழில் பெண்களின் பொருளாதார விடுதலையே இச்சங்கத்தின் குறிக்கோளாகும். எல்லா பட் துவக்கிய சுயதொழில் பெண்கள் சங்கம் பிற மாநில சங்கங்களுக்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் இருந்தது.

**6. பணிபுரியும் பெண்கள் அமைப்பு (தமிழ்நாடு)**

இவ்வமைப்புகள் சிறு மற்றும் குறு கடன் உதவி, பயிற்சி ஆகியவைகளை வழங்கி பணிபுரியும் ஏழை பெண்களின் வறுமையை போக்குதல், பொருளாதாரத்தில் அவர்களை வலிமைப்படுத்துதல், அவர்களது சமூக கலாச்சார அந்தஸ்தினை மேம்படுத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டன.

**7. அன்னபூர்ணா பெண்கள் இயக்கம் (மகாராஷ்டிரம்)**

இந்த அமைப்பு பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் நலனுக்காக பாடுபட்டது. அமைப்பின் பணிகளாவன: பெண்களுக்கு கல்வி, ஆரோக்கியம், ஊட்டசத்து, தாய் சேய் நலன், குடும்பக்கட்டுப்பாடு, எழுத்தறிவு மற்றும் சுற்றுச்சூழல் சுகாதாரம் போன்றவற்றில் விழிப்புணர்வை உண்டாக்கின. பெண்கள் தன்னிச்சையாக செயல்படவும் வழிவகை செய்தன.

**8. பெண்கள் முற்போக்கு அமைப்பு**

பெண்கள் முற்போக்கு அமைப்பு 1974ஆம் ஆண்டு ஹைதராபாத்தில் தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பு பெண் சமத்துவத்தை வலிவுறுத்தியது.

**9. சிப்கோ இயக்கம்**

உத்தரகண்ட் மாநிலத்தில் 1973ஆம் ஆண்டு நடைபெற்ற அமைதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கமே சிப்கோ இயக்கமாகும். இந்தியில் சிப்கோ என்றால் கட்டுப்பிடி என்று பொருள்படும். விளையாட்டு பொருட்கள் தயாரிக்கும் கம்பெனி அலக்நந்தா பள்ளத்தாக்கில் மரங்களை வெட்டுவதற்காக அரசு அனுமதி பெற்று வந்தது. மரங்களை வெட்டக்கூடாது என்று அப்பகுதி மக்கள் முக்கியமாக பெண்கள் அமைதியாக போராடினார்கள். தஸோலி கிராம ஸ்வராஜ்ய மண்டல் (GSSM) என்ற அரசு சாரா அமைப்பும் அதன் தலைவர் சந்திபிரசாத் பட் அவர்களும் போராடினார்கள்.

**10. விலைவாசி எதிர்ப்பு முன்னணி**

இந்தியாவில் மக்கள்தொகைப் பெருக்கமும், விலைவாசி ஏற்றமும் கட்டுப்படுத்த முடியாதவையாகும். மராட்டிய மாநிலத்தில் வறட்சியாலும் பஞ்சத்தாலும் நகரங்கள் பாதிக்கப்பட்டபோது பொருட்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்தன. பதுக்கல்காரர்களும், கருப்பு சந்தைக்காரர்களும் கொள்ளை லாபம் பெற்றனர். விஷம்போல் ஏறிய விலைவாசியால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களேயாவர்.

விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்ட பெண்களை ஒன்று திரட்டிப் போராடுவதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட அமைப்பே விலைவாசி எதிர்ப்பு முன்னணியாகும். இம்முன்னணியை உருவாக்கியோர் சோஷலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மிரினால் கோரேயும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைத் சேர்ந்த அகல்யா ரங்கேகரும் இக்கூட்டணியை அமைத்தனர்.

விலைவாசி எதிர்ப்பு முன்னணி விலைவாசி ஏற்றத்துக்கு எதிராக நகரப் பெண்களை ஒன்று திரட்டியது. இது விலைவாசி கட்டுப்பாடு மற்றும் அத்யாவசியப் பொருட்களை நியாய விலைக்கு விற்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளைக் கொண்ட பெண்கள் இயக்கமாக செயல்பட்டது. பெண்கள் குழுக்கள் கள்ளச் சந்தைக்காரர்களின் வளாகங்கள் மீது திடீர்த்தாக்குதல்கள் நடத்தின. விலைவாசி எதிர்ப்பு முன்னணி நகர்ப்புற பெண்களின் அன்றாட வாழ்க்கையை பாதித்த பொருளாதாரத் துன்பங்களுக்கு எதிரான இயக்கமாகும்.

**11. நவ நிர்மாண் சமிதி**

துவக்கத்தில் நவ நிர்மாண் சமிதி விலைவாசி உயர்வுக்கு எதிரான மாணவர் போராட்டமாக இருந்தது. பின்னர் மத்திய தர வகுப்புப் பெண்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றமையால் போராட்டம் இயக்கமாக விரிவடைந்தது. விலைவாசி எதிர்ப்பு முன்னணியும், நவ நிர்மாண் சமிதியும் பெண்கள் இயக்கத்துக்கு உந்துதலையும், உத்வேகத்தையும் தந்தன. எடுத்துக்காட்டாக ஆந்திராவில் பெண்கள் முன்னேற்ற சங்கம் (Progressive Organisation of Women) துவக்கப்பட்டது. 1975ல் பெண்ணிய இயக்கம் புத்துயிர் பெற்றது. 1980கில் இந்தியாவின் பல பகுதிகளில் பெண்கள் குழுக்கள் பல போராட்டங்களை நடத்தினர். பெண்கள் நலன், பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், விவாகரத்து, வாழ்வியல் உரிமை போன்ற பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன. பேண் கல்வியும், பெண்களுக்கான வேலை வாய்ப்பும் பிரதான கோரிக்கைகளாக இருந்தன.

**12. மீ டூ இயக்கம்**

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்களை தடுக்கும் நடவடிக்கையாக அமெரிக்காவில் தோன்றிய இயக்கம். இதனைப்போன்று இந்தியாவிலும் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டோர் உருவாக்கிய இயக்கம் மீ டூ இயக்கம்.

**பெண்கள் பங்கேற்பு இயக்கங்கள்**

மேற்கண்ட இயக்கங்கள் அனைத்தும் பெண்கள் பங்கேற்பு இயக்கங்களாகும், இவ்வியக்கங்கள் ஆதிவாசிகள், பிற்படுத்தப்பட்டோர், புறக்கணிக்கப்பட்டோர், விவசாய மற்றும் பெண் தொழிலாளர்கள் ஆகியோரின் சமூக, பொருளாதார, அரசியல் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன. பெண்கள் பங்கேற்பு இயக்கங்களின் பிரதான கோரிக்கைகள் இரண்டு: 1. பெண்களுக்கு எதிரான சமூகப் பழக்கவழக்கங்களை சீர்திருத்தம் செய்வது. 2. ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்குச் சம அரசியல், சமூக பொருளாதார, குடும்ப உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கோருவது.

பெண்கள் பங்கேற்பு இயக்கங்களின் குவிமையமாக இருப்பது பெண்ணியம் (Feminism) ஆகும். பெண்ணியம் என்பதற்குப் பல வரையறைகளும், விளக்கங்களும் கொடுக்கப்படுகின்றன. இருப்பினும் பெண்ணியம் என்பது பாலியல் சமத்துவம் பற்றியது என்பதில் கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளது. பெண்கள் உரிமைப் பிரச்சினையை தேசிய பிரச்சினையாக்கியது பெண்கள் பங்கேற்பு இயக்கங்களின் மகத்தான சாதனையாகும்.